2003 மார்ச் 31]

இருக்கக்கூடிய வேளாண்மை அலுவலகத்திலே நல்ல தரமான பூச்சி மருந்துகளை விற்பனை செய்ய இந்த அரசு முன்வருமா என்பதனை உங்கள் மூலமாகக் கேட்க விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவர்களுடைய வயலிலே அவர்களுக்கு ஏற்பட்ட அனுபவத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்கு மிகப் பெரிய நட்டம் ஏற்பட்டதாகவும் சொல்லியிருக்கிறார்கள். களை அதிகமாக இருந்து, அதற்குக் களைக் கொல்லி மருந்து அடித்து, அதற்கும் போகவில்லை என்று சொன்னார்கள். உழுகிறபோதே, நிலத்தைப் பண்படுத்துகிறபோதே நன்றாகப் பண்படுத்தியிருக்க வேண்டும். இருந்தாலும்கூட உறுப்பினர் அவர்கள் குறிப்பாகச் சொல்லியிருக்கிற காரணத்தினால், அவர்களுடைய நிலத்திலேயே வேளாண்மை விரிவாக்க அலுவலர்கள் சென்று பார்த்து, என்ன காரணம் என்பதையும், அதற்காக இவர்கள் அடித்த மருந்துகளையும் அறிந்து அதற்குரிய ஆய்வு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 148, திரு. க. முருகவேல் ராஜன், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

148—

மாணவர்களுக்குச் சலுகை

***5556—திரு. க. முருகவேல் ராஜன்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வந்தவாசி தொகுதி, வெளியம்பாக்கம் அரசு உயர்நிலைப் பள்ளியில் 6, 8 ஆம் வகுப்பு மாணவர்களுக்குச் சத்துணவு, இலவசப் பாடநூல், சீருடைகள் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வந்தவாசி ஊராட்சி ஒன்றியம், வெளியம்பாக்கம் அரசு நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளியாக 2000-2001 ஆம் ஆண்டு முதல் தரம்

உயர்த்தப்பட்டு, இப்பள்ளியில் ஒன்றாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும், சத்துணவு உட்கொள்ளும் மாணவர்களுக்குச் சத்துணவு, இலவசப் பாடநூல் மற்றும் சீருடைகள் வழங்கப்பட்டு வருகின்றன என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. முருகவேல் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய திருவண்ணாமலை மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டம். அதிலும் குறிப்பாக, வந்தவாசி தொகுதி மிகவும் பின்தங்கிய பகுதியாக இருக்கிறது. நான் குறிப்பிட்டிருக்கின்ற வெளியம்பாக்கம் அரசு உயர்நிலைப் பள்ளி 2000 ஆம் ஆண்டுதான் நடுநிலைப் பள்ளியாக இருந்து உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட்டிருக்கிறது. 60 சதவீதம் பேர் மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்களும், 38 சதவீதம் பேர் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த மாணவர்களும் அங்கே பயின்று வருகிறார்கள். நான் இங்கே வைத்திருக்கின்ற இந்தக் கேள்வி 2001 ஆம் ஆண்டு அரசுக்குக் கொடுக்கப்பட்ட கேள்வியாகும். ஆனால், 2001 ஆம் ஆண்டிலிருந்து இன்றைக்கு வரை மூன்று ஆண்டுகளாகியும்கூட சத்துணவு கொடுப்பது ஆரம்பத்திலே நடுநிலைப் பள்ளியாக இருந்தபோது ஒதுக்கப்பட்ட அளவுதான் இப்போதும் இருக்கிறதே தவிர, உயர்நிலைப் பள்ளியாக நிலை உயர்த்தப்பட்ட பிறகும் முறையான அளவில் சத்துணவு அங்கே வழங்கப்படவில்லையென்றும், இதுவரை ஓராண்டு முடிவு பெற்று இப்போது முழு ஆண்டுத் தேர்வு எழுதுகிற இந்த நேரம் நெருங்குகின்ற வரையிலும்கூட, மிகவும் ஏழ்மை நிலையில் இருக்கக்கூடிய தாழ்த்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாய மாணவர்கள் 90 சதவீதம், 99 சதவீதம் படிக்கின்ற அந்த நிலைமையிலும்கூட இதுவரைக்கும் சீருடைகள் வழங்கப்படவில்லை என்றும் தொடர்ந்து அந்தப் பகுதியைச் சார்ந்த மக்கள் என்னிடம் புகார் மனுக்கள் கொடுத்துக் கொண்டே இருக்கிறார்கள் என்பதைச் சொல்லி, இத்தகையதோர் நிலைமை மாற்றப்படுமா, மாணவர்களுக்கு உரிய முறையில் சத்துணவு, இலவசப் பாடநூல், சீருடைகள் வழங்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிற அதே நேரத்தில், இலவசப் பாடநூல் என்பது மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த மாணவர்களுக்கும் வழங்கப்படுகிறதா என்பதையும், அப்படியில்லையென்றால், அவர்களுக்கு வழங்குவதற்கு அரசே முயற்சிகளை மேற்கொள்ளுமா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2003 மார்ச் 31]

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்னுடைய பதிலிலேயே 2000-2001 ஆம் ஆண்டு தரம் உயர்த்தப்பட்டது என்றுதான் குறிப்பிட்டிருக்கிறேன். ஆக, அதிலே ஒரு மாறுபட்ட கருத்து இல்லை. ஒன்றாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை மட்டும்தான் இப்போது சீருடை வழங்கப்பட்டு வருகின்றது. அதிலேயும் சத்துணவு வழங்குகிறபோது ஜாதி மத பேதம் எதுவுமே பார்த்துச் சத்துணவு வழங்கப்படுவதில்லை. அது, எந்தப் பள்ளியிலே படித்தாலும் ஜாதி பார்த்துச் சத்துணவு சாப்பிடுவதற்கு யாரும் வருவதில்லை. அனைவருக்கும் ஒன்றாகத்தான் — விரும்புகிறவர்களுக்கு — சத்துணவு வழங்குகிறோம். சில பள்ளிக்கூடங்களிலே சீருடை வாங்க வேண்டும் என்பதற்காகச் சத்துணவு சாப்பிட வேண்டுமென்று பெயர் தந்துவிடுகிறார்கள். சில நேரங்களில் அந்தக் கிராமத்திலே இருக்கின்ற சூழ்நிலையின் காரணத்தால், அவர்களுடைய வசதி வாய்ப்பின் காரணத்தால் சாப்பிட மறுத்துவிட்டுச் சீருடையை மட்டும் பெற்றுக்கொண்டு போகிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்ற அந்த வெளியம்பாக்கம் நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளியாக மாற்றப்பட்டு, பிறகு 320 பேர்கள் சத்துணவு சாப்பிடுவதற்குப் பெயர் குறிப்பிடப்பட்டு, தற்போது சாப்பிட்டு வருகிறார்கள். சீருடை, பாடபுத்தகங்கள் 295 பேர்களுக்குக் கொடுக்கப்பட்டு, இப்போது வழங்கப்பட்டு வருவது 203 பேர்களுக்கு மட்டும்தான் இந்தப் பயனை அரசாங்கத்தின் மூலமாகப் பெற்றிருக்கிறார்கள் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. க. முருகவேல் ராஜன்.

திரு. க. முருகவேல் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு வழங்கப்படுவதில் சாதிப் பாகுபாடு இருக்கிறது என்று நான் சொல்லவில்லை. சீருடைகளையும், இலவசப் பாட நூல்களையும் பெறுவதில் சமூக அடிப்படையிலான அளவுகோலை அரசு வைத்திருக்கிறதா? அது தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு மட்டுமல்லாமல் ஏழ்மையில் இருக்கும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கும் வழங்கப்படுமா என்பதை அறிந்துகொள்வதோடு 203 பேர்களுக்கு இலவச பாடநூல்கள், சீருடைகள் அந்தப் பள்ளியில் வழங்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் தகவல் தெரிவித்திருக்கிறார்கள். அது, இப்போது

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வழங்கப்பட்டுள்ளதா அல்லது இனிமேல்தான் வழங்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலவசச் சீருடை என்பது ஜூன் மாதம், ஜூலை மாதங்களில்தான் அந்தப் பிள்ளைகளுக்குப் போய்ச் சேரும். கடந்த ஆண்டு ஏற்கெனவே, வழங்கியாகி விட்டது. இந்த ஆண்டு வழங்கப்படுகிற சீருடைகள் கூட்டுறவுத் தையல் சங்கங்கள் மூலமாகத் தைத்துத் தரப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல் இந்தச் சத்துணவு வழங்குவதில் பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் என்கிற எந்தவிதமான பாகுபாடும், வரைமுறையும் பார்த்து வழங்கப்படுவதில்லை. இரண்டாவது, சத்துணவு சாப்பிடுகிற பிள்ளைகளுக்கு மட்டும்தான் இலவசப் பாடநூல், இலவசமான சீருடைகள் வழங்கப்படும் என்பதை மீண்டும், மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 149, திரு. இரா. திருமாவளவன், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

149—

உடற்பயிற்சி ஆசிரியர் நியமனம்

***7163—திரு. இரா. திருமாவளவன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் ஆதிதிராவிடர் நலத் துறையின்கீழ் இயங்கி வரும் உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் உடற்பயிற்சி ஆசிரியர்களை நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்

(ஆ) மொத்தமுள்ள 153 உடற்கல்வி ஆசிரியர் பணியிடங்களில் 16 பணியிடங்கள் காலியாக உள்ளன. காலியாக உள்ள 16 பணியிடங்களை